Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 83 | thalaivaasaltv@gmail.com | வெள்ளிக்கிழமை | டிசம்பர் 25, 2020

## பிரதேச செயலர்களுக்கு இடமாற்றம்

பூநகரி, பச்சிலைப்பள்ளி மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர்களுக்கு இடமாறுதல் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச செயலராக செயற்பட்டு வரும் எஸ்.

03

## பட்டப்பகலில் ஒருவர் குத்திக் கொலை மீசாலை புத்தூர் சந்தியில் சம்பவம்



யாழ்ப்பாணம் - தென்மராட்சி- மீசாலை, தாட்டான் குளம் வீதியில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக கொடி

03

## 300 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்ட ரகுபதி சர்மாவுக்கு கொரோனா!


முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை இலக்குவைத்து 1999ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டு 300 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள அரசியல் கைதியான ரகுபதி சர்மா கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவருடன் கொழும்பு மகசின் சிறையில் தொற்றுக்குள்ளான அரசியல் கைதிகளின்

03

## மருதனார்மடம் கொத்தணி 14 நாள் சுயதனிமையில் இருந்த வியாபாரிக்கு கொரோனா

### இரண்டாம் கட்ட பிசிஆர் பரிசோதனையில் முடிவு



யாழ்.மருனார்மடம் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டுவருகின்ற உடுவிலைச் சேர்ந்த மற்றொருவருக்கு இன்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அருவிக்குத் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் 124 பேருக்கு இன்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

03

## நிபந்தனைகள் இன்றி அரசியல் கைதிகளை விடுவியுங்கள்!



கொரோனா அச்சுறுத்தல் நிலவும் இக்கால பகுதியில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை நிபந்தனைகள் இன்றி மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்க வேண்டும் என யாழ். மாநகர சபை உறுப்பினர் சடடத்தரணி வி.மணிவண்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இன்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

03

## தேர்தல் வாக்களிப்பு பொறிமுறையில் மாற்றம்

### முற்கூட்டிய வாக்களிப்பு முறை?

தேர்தல் வாக்களிப்பு பொறிமுறையில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல்புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் பணிபுரிபவர்கள், ஊகவியலாளர்கள், தேர்தல் காலங்களில் அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடுபவர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் வாக்களிப்பில் பங்கேற்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விவகாரம் தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதற்கு பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும்

03

## மக்களின் வயிற்றில் அடிக்கிறது அரசு கடுமையாகச் சாடுகின்றது ஜே.வி.பி.

“கொரோனாவைக் காரணம் காட்டி அரசு மக்களின் வாழ்வாதாரத்துடன் விளையாடுகின்றது.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் அரசின் இயலாமை வெயிடப்பட்டுள்ள நிலையில் கேலிக்கூத்தான வர்த்தமானிகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது.”

 இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி கடுமையாகச் சாடியுள்ளது.



மக்கள் விடுதலை முண்ணணியின் தலைமைகயத்தில் நேற்று நடைபெற்ற

03

## கல்மடுக் குளத்திற்கு நீராடச் சென்றவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்

கிளிநொச்சி கல்மடுக் குளத்தில் நண்பர்களுடன் குளத்திற்கு சென்றபோது நீரில் மூழ்கி ஒருவர் காணாமல் போயுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இன்று (டிச-25) பிற்பகல் 3 மணியளவில் குறித்த நபர் மூன்று பேருடன் குளத்திற்கு சென்றதாகவும் குளத்துக்குள் இறங்கிய போது நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.



இதையடுத்து கூடசென்றவர்களுடன் ஊரவர்களும் இணைந்து தேடும் பணி

03



# யாழ். போதனா வைத்தியசாலையில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்



யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை விடுதியில் கிறிஸ்மஸ் விழா இன்று கொண்டாடப்பட்டது.

தலைவாசல் Thalaivaasal

## தினம் ஒரு ஆரோக்கிய தகவல்

புகைப்பதனால் பாரிய சுகாதார பிரச்சனைகள் ஏற்படுகின்றன. மாரடைப்பு,பாரிசவாதம், புற்று நோய், ஆண்களில் பாலியல் தொழிற்பாடுகள் மந்தமடைதல் போன்றவை ஏற்படலாம். புகைப் போருக்கு அருகிலிருப்பவர்களும் பாதிப்பிற்குள்ளாவார்கள். புகைப் பதனால் அழகற்றவர்களாகவும் துர்நாற்றமுடையவர்களாகவும் சந்தோசமற்றவர்களாகவும் மாற்றமடைவர். உங்கள் நண் பர்கள் யாராவது புகைப்பவர்களாக இருப்பின் அவர்களுக்கு மேற் கூறிய பிரச்சனைகள் இருக்கக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. அவர்கள் அதனை தெரிவிக்க தயங்குவர் (முக்கியமாக பாலியல் தொழிற்பாடுகள் மந்தமடைதல் போன்றவற்றை) அவர்களுக்கு மருத்துவ ஆலோசனை பெற ஏற்பாடு செய்வதன் மூலம் அவர்கள் ஆரோக்கியமான வாழ்வு வாழ நீங்கள் உதவ முடியும்.

**வைத்தியகலாநிதி கோ.றஜீவ்**

# ஈஸ்டர் தாக்குதலின் வலிகளை சுமந்தவாறே மக்கள் கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடுகிறார்கள்



ஈஸ்டர் தாக்குதலின் கடுமையான வலிகளை சுமந்தவாறே இந்த நாட்டின் கிறிஸ்தவ மக்கள் கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடுகிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உலகெங்கிலும் உள்ள கோடிக் கணக்கான கிறிஸ்தவர்களின் உள்ளங்களில் இறைவன் மீதான பக்தியுணர்வை தூண்டும் இயேசு கிறிஸ்துவின் பிறப்புடன் தொடர்புடைய கிறிஸ்மஸ் பண்டிகை யானது உயிர்ப்பு விழாவுக்கு அடுத்ததான உன்னதமான சமயப் பண்டிகையாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு அவர் இன்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், "இயேசு நாதர் போதித்த மற்றும் நடைமுறையில் வாழ்ந்துகாட்டிய அமைதி, அன்பு, இரக்கம், சகவாழ்வு, கருணை போன்ற பண்பட்ட மனித சமூகத்தின் அடித்தளத்தை வடிவமைக்கும் உன்னத பெறுமானங்களை உள்ளடக்கு கிறது.

கிறிஸ்மஸ் பண்டிகை சமூக ரீதியாக, கிறிஸ்தவ குடும்பங்கள் ஒன்றுகூடுவதற்கும் பரிசுகளை பரிமாறிக்கொள்வதற்கும் பகைமைகளை மறந்து பிணைப்பினை புதுப்பிப்பதற்குமான ஒரு மகிழ்ச்சியான சந்தர்ப்பமாகும்.

கொவிட் -19 தொற்றுநோய் நிலைமைகளுக்கு மத்தியில் பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக செயலற்றிருக்கும் உலகை மீண்டும் எழுச்சி பெறச்செய்ய இவ்வாறான நன்நெறிகளை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

ஒரு வருடத்திற்கும் முன்னர் ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலின் கடுமையான வலிகளை சுமந்தவாறே இந்த நாட்டின் கிறிஸ்தவ மக்கள் நத்தார் பண்டிகையை கொண்டாடுகிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

ஆயினும்கூட, அந்த அச்சங்களையும் பாதுகாப்பற்ற தன்மையையும் அகற்று வதற்கும் அச்சம், சந்தேகம் இல்லாமல் அனைவரும் சமயக் கிரியைகளில் ஈடு படுவதற்கான சூழலை உருவாக்குவதற்கும் எமக்கு முடிந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியும் அவ்வாறே வழங்கப்படும்" எனவும் ஜனாதிபதி தமது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# விஞ்ஞானம் புதைப்பு இனவாதம் எரிப்பு

## ஜனாஸா எரிப்புக்கு எதிராக கல்முனையில் போராட்டம்




ஜனாஸா எரிப்புக்கு எதிரான வெள்ளை துணி கவனயீர்ப்பு போராட்டம் ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ் அப்துல் ரஸ ராக்கின் ஏற்பாட்டில் கல்முனை பிரதான வீதியில் கொரோனா சுகாதார நடை முறைக்கமைய வெள்ளிக்கிழமை(25) மதியம் இடம்பெற்றது.

இப் போராட்டமானது பல்வேறு சுலோகங்களை தாங்கி மேற்கொள் ளப்பட்டதுடன் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் நேர காலத்துடன் முடிவுறுத்தப்பட்டது.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.எச்.எம்.ஏ. மனாப் உள்ளிட்ட அரசியல், சமூக, பொதுநல, செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

இப்போராட்டத்தில் ஜனாஸா எரிப்புக்கு எதிரான வாசகங்கள் மும் மொழிகளிலும்காட்சிப்படுத்தப்பட்டன. இனவாத தீ இன்றோடு அணையட்டும், விஞ்ஞானம் புதைப்பு இனவாதம் எரிப்பு, அரசே 20 நாள் குழந்தை எரிப்பில் இருந்து உன் அழிவு ஆரம்பம், WHOஇன் வழிகாட்டலை பின்பற்று , உலகமே புதைக்கிறது நாம் மட்டும் எரிக்க வேண்டுமா? அரசே உனது கொடூர செயலை நிறுத்து, போன்ற வாசகங் கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

# திரையரங்குகளைத் திறக்க அனுமதி திரைப்படக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு



நாட்டில் தனிமைப்படுத்தப்படாத பகுதிகளில் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து திரையரங்குகளைத் திறக்கவுள்ளதாக திரைப்படக் கூட்டுத் தாபனம் அறிவித்துள்ளது.

எனினும், திரையரங்கின் மொத்த கொள்ளளவில் 25 வீத அனுமதியுடன் திரையரங்குகளைத் திறக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெடுந்தீவு மக்களுக்கு வாழ்வாதாரத் திட்டம்!

நெடுந்தீவு, வெட்டக்களிக் குளத்தில் சுமார் *460,000* ரூபாய் பெறுமதியான *11* இலட்சத்து ஐம்பதாயிரம் இறால் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலுக்கு அமைய நீர் வளங்கள் உரப் பயன்பாட்டிற்கு வழியமைத்தல் எனும் கருத்திட்டத்தின் அடிப்படையில் தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நேற்று குறித்த திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

வெட்டக்களிக் குளத்தினை வாழ்வாதாரமாகக் கொண்டு சுமார் *50* குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் ஊடாக சுமார் *1* கோடி *50* இலட்சம் பெறுமதியான, அண்ணளவாக 15,000 கிலோ கிராம் இறால்களை அறுவடை செய்ய முடியும் என்று துறைசார்ந் தோரினால் மதிப்பீடு செய்யப்பட் டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையில், கடந்த வருடம் வெட்டக்களி குளத்தில் விடப்பட்ட இறால் குஞ்சுகள் பிரதேச மக்களுக்கு நிறைவான பலனை கொடுத்திருந்த நிலையில், கடந்த வருட செயற் றிட்டத்தின் தொடர்ச்சியாக, குறித்த இறால் குஞ்சுகள் விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா: கிழக்கில் நான்காவது மரணம் பதிவு



கிழக்கு மாகாணத்தில் நான்காவது கொவிட் தொற்று மரணம் பதிவாகி யுள்ளதாக கல்முனை பிராந்திய சுகாதார பணிமனை பணிப்பாளர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "நேற்று (வியாழக் கிழமை) *54* வயதுடைய அட்டாளைச் சேனை பிரதேசத்தை சேர்ந்த ஒரு பொது மகன் நெஞ்சுவலி காரணமாக அக்க ரைப்பற்று வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டிருந்தார்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட ஈ.சி. ஜி.பரிசோதனையைத் தொடர்ந்து அவருக்கு மாரடைப்பு வந்திருப்பதாக அடை யாளப்படுத்தப்பட்டு, அன்டிஜென்ட் பரிசோதனையும் செய்தபொழுது குறித்த நபருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

குறித்த நபர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்தார்.

இவ்வாறு வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுக்கொண்டிருந்த அவர் சிகிச்சைப் பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

இதனடிப்படையில் கல்முனை பிராந்தியத்தில் இதுவரை நான்காவது கொரோனா மரணம் பதிவு செய்யப் பட்டுள்ளது" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மருதனார் மடம்...

தொற்றுக்குள்ளானவர் மருதனார்மடம் சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் உடுவிலைச் சேர்ந்தராவார். *14* நாட்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் தொற்று அடையாளம் காணப்படவில்லை. தனிமைப்படுத்தல் நிறைவுபெறும் போது மேற்கொள்ளப்படும் இரண்டாம் கட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## பட்டப்பகலில்...

காமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொடிகாமம், இராமாவில் பகுதியைச் சேர்ந்த சுமார் 50 வயதுடைய ஐயாத்துரை மோகனதாஸ் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இனந்தெரியாத நபர்களால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

கூலித் தொழிலாளியான குறித்த குடும்பஸ்தர் துவிச்சக்கர வண்டியில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த போதே கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள அதே வேளை சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மக்களின் வயிற்றில்...

ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது உரையாற்றிய பிரசார செயலாளர் விஜித ஹேரத் எம்.பி. கூறுகையில்,

"மக்களால் தாங்கிக்கொள்ள முடியாதளவுக்கு அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

கொரோனாத் தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில் மக்களின் வாழ்வாதாரம் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக *2020* முதலாம் காலாண்டில் உள்நாட்டு விவசாய உற்பத்தி *5.6* வீதத்தால் வீழ்ச்சி கண்டிருந்தது. தொழிற்சாலைகள் துறை *7.8* வீதத்திலும், சேவை துறை *1.6* வீதத்திலும் வீழ்ச்சி கண்டது.

மார்ச் மாதம் *19*ஆம் திகதிக்குப் பின்னரே நாடு முடக்கப்பட்டது. எனவே, முதலாம் காலாண்டில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குக் கொரோனாவைக் காரணம் காட்ட முடியாது.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் அரசின் இயலாமையே இதன் ஊடாக வெளிப்படுகின்றது. மக்களின் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்திற்கு எவ்வகையிலும் கொரோனா காரணம் இல்லை. தற்போதைய அரசு ஆட்சிப்பீடம் ஏறி மிகக் குறுகிய காலத்துக்குள் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலை மிகவேகமாக அதிகரித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை மறைப்புள்ளியில் காணப்பட்ட போதிலும் அதன் பயனை மக்களுக்கு இந்த அரசு வழங்கவில்லை. மக்கள் எவ்வகையில் சீரழிந்தாலும் அரசு கருத்தில் கொள்ளப்போவதில்லை. கொரோனாவைக் காரணம் காட்டி பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டது.

பயணிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கே இவ்வாறு கட்டணம் அதிகரிக்கப்படுகின்றது என்று கூறிய போதிலும் அனைத்து பஸ்களிலும் வழமைபோல் பயணிகள் தொங்கிக்கொண்டே செல்கின்றனர். மக்களின் சுகாதாரப் பாதுகாப்பு எவ்வகையிலும் உறுதிப்படுத்தப்பட வில்லை.

அரசால் அத்தியாவசிய பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வரலாற்றில் முதல் தடவையாக தேங்காய்க்கு வர்த்தமானியை இந்த அரசு வெளியிட்டது. வர்த்தமானியின் விலை மட்டங்களுக்குத் தற்போது எங்குமே தேங்காய் கிடையாது. பொருளாதார மையங்கள் வர்த்தக அமைச்சரின் கீழ் இல்லை" - என்றார்.

## நிபந்தனைகளின்றி...

மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சிறைகளில் 10 தொடக்கம் 20 வருடங்களுக்கு மேலாக 78க்கும் அதிகமான அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் தற்போது 15க்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் கொரோனோ தொற்றுக்கு உள்ளாகிய நிலையில் கொரோனா சிகிசை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏனையவர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்படும் அபாயமுள்ளது.

இலங்கை சிறைசாலைகள் நெருக்கடி மிக்கவை. அத்துடன் சுகாதார வசதிகளும் அற்றவை. இந்நிலையில் தொடர்ந்து அரசியல் கைதிகளை தடுத்து வைத்திருப்ப தனால், அவர்களுக்கு உயிர் ஆபத்து ஏற்படும் நிலையுள்ளது.

எனவே மனிதாபிமான அடிப்படையில் நிபந்தனைகள் இன்றி அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என கோரியுள்ளார்.

அதேவேளை யாழ்.மாநகர சபையில் புதிய முதல்வர் தெரிவின் போது தங்களின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது,

பாதீட்டில் உள்ள சில குறைப்பாடுகளும் கடந்த காலங்களில் முதல்வரின் நடவடிக்கையில் ஏற்பட்டு இருந்த அதிருப்தியாலுமே பாதீட்டை எதிர்த்தோம்.

எதிர்வரும் காலங்களில் யாழ்.மாநகர சபையில் சிறப்பான ஆட்சி அமைக்க உதவுவோம் என்றார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமது உறுப்பினர்களுடனான கூட்டத்தில் ஆர்னோல்ட் அவர்களை முதல்வராக முன் மொழியாவிடின், தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்குவோம் என முடிவெடுத்து உள்ளதாக கூறியமை தொடர்பில் கேட்ட போது,

எனக்கு எந்த கூட்டத்திற்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி கூட்டம் நடைபெற்றவில்லை போல. அதனால் எனக்கு அது தொடர்பில் தெரியாது என தெரிவித்தார்.

## 300 ஆண்டுகள்...

எண்ணிக்கை 14-ஆக அதிகரித்துள்ளது.

அரசியல் கைதிகள் உட்பட பல்வேறு சிறைகளில் உள்ள 65 வரையான தமிழ் கைதிகளுக்கும் இதுவரை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தொற்று உறுதியான அரசியல் கைதிகள் அனைவரும் கந்தக்காடு கொரோனாத் தொற்று சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர் என்று முதலில் தகவல்கள் வெளியாகியிருந்தபோதும் தற்போதுவரை வெலிக்கடை சிறை வைத்தியசாலையிலேயே அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மகசின் சிறையில் மட்டும் 44 அரசியல் கைதிகள் உள்ள நிலையில் அவர்கள் அனைவரும் அச்சம் காரணமாக பி.சி.ஆர். பரிசோதனை செய்துகொள்ளப் பின்னடித்து வருகின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அனைவருக்கும் பரிசோதைனை முன்னெடுக் கப்பட்டால் மேலும் தொற்று நோயாளர் தொகை அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ் அரசியல் கைதிகள் பலர் நீண்ட காலம் சிறையில் உள்ளனர். அத்துடன் இவர்களில் பலர் நீண்டகால நோய் நிலைகளுக்கு ஆட்பட்டவர்கள் என்பதால் தொற்று நோயால் இவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் எனக் குடும்பத்தினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அரசியல் கட்சிகள், சிவில் சமூகங்கள் மற்றும் மதத் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டும் என அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப் போராடி வரும் குரலற்றவர்களின் குரல் அமைப்பு மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறைந்தது அவர்களை உடனடியாகப் பிணையிலாவது விடுவித்து அவர்களின் உயிரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர் மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசி வருகின்றனர்.

## தேர்தல் வாக்களிப்பு...

ஜனவரி மாதமளவில் குறித்த விசேட பொறிமுறை தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய தேர்தல் முறைமையில் திருத்தம் மேற்கொள்ளப்படுவதுடன் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஊடாக

சட்டமியற்றும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல்புஞ்சிஹேவா மேலும் தெரிவித்துள்ளார்.

## கல்மடுக்குளத்தில்...

கடந்த 2 மணி நேரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் இதுவரை நீரில் மூழ்கி காணாமல் போனவரை கண்டுபிடிக்க முடியவில்லை.

தேடும் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

## பிரதேச செயலர்களுக்கு...

கிருஸ்ணேந்திரனை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலராகவும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலராக கடமையாற்றி வந்த பரமோதயான் ஜெயராணி ஒட்டிசுட்டான் பிரதேச செயலராகவும், ஒட்டிசுட்டான பிரதேச செயலக பிரதேச செயலராகக் கடமையாற்றி வரும் த.அகிலன் பூநகரி பிரதேச செயலராகவும் இடமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இவ் இடமாற்றமானது எதிர்வரும் மார்ச் மாதம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தலைவாசல்
எங்கள் பாரம்பரியம்
Thalaivaasal

வெள்ளிக்கிழமை, டிசம்பர் 25, 2020

# கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து விடுபட இறைவனை பிராத்திப்போம்



மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து விரைவாக விடுபட, நத்தார் காலத்தில் இறைவனை வேண்டுவோம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்தின் நத்தார் திருவிழா தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மேலும் கூறியுள்ளதாவது, “இவ்வருடம் நத்தார் திருவிழாவை நாங்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும்.

எமக்கு மகிழ்ச்சியை கொண்டு வரும் யேசுநாதர் பிறப்பு விழாவை நாங்கள் கொண்டாடுகின்றோம்.

இவ்வருடம் கொவிட் நோய் காரணமாக பலர் துன்பப்படுகின்றனர். தொழில் இல்லாத பிரச்சினை, உணவை பெற்றுக் கொள்ளுவதற்கும் எத்தனையோ தடைகள், கட்டுப்பாட்டுக்குள் உள்ள மக்களும் பல்வேறு விதமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆகையினால் நாங்கள் அவர்களையும் நினைத்து இவ்வருடம் வெளி ஆடம்பரங்களை குறைத்து, நத்தாரை கொண்டாடுவோம்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா உயிரிழப்பு 185ஆக உயர்வு!

நாட்டில் மேலும் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றினால் மரணித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அகலவத்த பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஆண் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த 20ஆம் திகதி உயிரிழந்த நிலையில், இறப்புக்கான காரணம் கொரோனா வைரஸ் தொற்றுடன் இரத்தம் விஷமானமை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 185ஆக அதிகரித்துள்ளது.

## கொத்தமல்லி எனத் தெரிவித்து நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட குப்பைகள்!

உக்ரைனிலிருந்து கொத்தமல்லி எனத் தெரிவித்து குப்பை கொள்கலன்கள் மறுபடியும் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளமை சுங்கப் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

8 இறக்குமதியாளர்களினால் உக்ரைனிலுள்ள AGRONIKA TRADE எனப்படும் நிறுவனத்தினால் இந்த கொள்கலன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

கடந்த 10ஆம் திகதி இந்த 8 கொள்கலன்களும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்பதுடன், மேலும் 20 கொள்கலன்கள் 21ஆம் திகதி இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் இந்தக் கொள்கலன்களில் கொத்தமல்லி இருப்பதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இதன் பெறுமதி, வரி நீங்கலாக 756 இலட்சம் ரூபாய் என தெரிவிக்கப்படுகிறது.

கொள்கலன்களில் நான்கு கொள்கலன்கள் நேற்று மாலை சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது, கொள்கலன்களில் விவசாயக் கழிவுகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இறக்குமதியாளர்கள் மோசடியில் சிக்கியுள்ளார்களா என்பது குறித்து ஆரம்பகட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன குறிப்பிட்டார். மேலும் இடைத்தரகர்கள் சூழ்ச்சி செய்துள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை சுங்கத்தின் சட்டங்களுக்கு அமையவும், சுற்றாடல் சட்டத்திற்கு அமையவும், தாவர பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் அவற்றை இலங்கைக்கு இறக்குமதி செய்யவோ வைத்திருக்கவோ முடியாது என்பதால், அவற்றை மீண்டும் உக்ரைனுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுனில் ஜயரத்ன கூறினார்.

## ரஸ்யாவின் கொரோனா வைரஸ் மருந்தினை இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கை






நத்தார் பண்டிகை ஒற்றுமை மற்றும் நல்லிணக்க உணர்வுகளை ஊக்குவிக்கிறது என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த வாழ்த்துச் செய்தியில் வடக்கு மாகாண ஆளுநர் மேலும் கூறியுள்ளதாவது, “நத்தார் என்பது வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் மகிழ்ச்சியான நினைவுகளை உருவாக்குவதாகும்.

நத்தார் இந்த ஆண்டின் மிகவும் மகிழ்ச்சியான பண்டிகைகளில் ஒன்றாகும். இது குழந்தைகள் மற்றும் வளர்ந்தவர்கள் உட்பட அனைவராலும் எதிர்பார்க்கப்படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக இது குடும்பம் மற்றும் அன்புக்குரியவர்களுடன் செலவழிக்கும் அன்பு, மகிழ்ச்சி மற்றும் விலைமதிப்பற்ற நேரம் பற்றியது.

மனித குலத்தின் மீது கொண்ட மாசற்ற அன்பின் காரணமாக மனிதனாய் மண்ணில் அவதரித்த இயேசு பாலனின் நல்லாசியுடன் நத்தார் புதுவருட வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, மக்கள் அனைவரும் நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையை கருத்திற்கொண்டு சுகாதார நடைமுறைகளைப் பேணி குடும்பத்தினருடன் ஒற்றுமையாய் மகிழ்வுடன் கொண்டாடுமாறு கேட்டுகொள்வதுடன் நாட்டு மக்கள் அனைவருக்கும் இயேசு பாலகனின் ஆசியும் அன்பும் கருணையும் கிடைப்பதற்கு வேண்டி நிற்கின்றேன்.

இந்த நத்தார் பண்டிகை ஒற்றுமை மற்றும் நல்லிணக்க உணர்வுகளை ஊக்குவிக்கிறது. சமூகம் ஒன்றிணைந்து வளமான மற்றும் அமைதியான புத்தாண்டிற்காக பிரார்த்தனை செய்யும் காலம் இதுவாகும்.

இந்த ஆண்டு, கொவிட்-19 தொற்று காரணமாக உங்கள் அருகிலுள்ள மற்றும் அன்பானவர்களை இந்த நாளில் சந்திப்பது கடினம். ஆனால் இது எந்தவிதத்திலும் இப்பண்டிகையின் மகிழ்ச்சியைப் பாதிக்கக்கூடாது” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நேற்று 500இற்கு மேற்பட்டோருக்கு தொற்று கண்டறிவு!

நாட்டில் நேற்று மட்டும் 588 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இலங்கையில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 39 ஆயிரத்து 228ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று 686 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை 30 ஆயிரத்து 568 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இன்னும் எட்டாயிரத்து 475 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.











## மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் நினைவு நாள்

நத்தார் தினத்தன்று சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் நினைவு நாள் நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது இதில் சட்டத்தரணி மணிவண்ணன் , யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு. இளங்கோ உள்ளூரச்சி சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.